நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,
ஈரோடு.

CC.No. 85/2018

Date. 04.11.2025

பெயர்: பிரகாஷ்

த/பெ.சின்னசாமி

வழக்கு சாட்சி. அ.சா.2

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. சாட்சிகளான பிரபு, ஈஸ்வரமூர்த்தி, துரைசாமி, பிரகாஷ், தியாகராஜன், பாலாஜி, கலைமணி, முத்துசாமி ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் நண்பர்கள் இல்லை தெரிந்தவர்கள். எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் மாலை சுமார் 04.45 மணிக்கு சென்றேன். நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே எனது அண்ணியை மருத்துவமனைக்கு அண்ணன் அழைத்து சென்று விட்டார் என்றால் இல்லை நான் போன பிறகு தான் அழைத்துச் சென்றார். நானும் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் அவர்கள் சென்ற பிறகு நானும் சென்றேன்.

2. தன்னை யார் அடித்தார்கள் என்று மருத்துவரிடம் அஞ்சலிதேவி சொன்னாரா என்றால் அப்போது நான் அங்கு இல்லை. நான் எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மாலை சுமார் 05.30 மணி இருக்கும். நான் அங்கு செல்வதற்கு முன்பே அவர்கள் சிகிச்சைக்கு சேர்ந்து விட்டார்கள் என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுக்கப்பட்டதா என்றால் அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து விட்டார்கள். காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்த உடனே போலீசார் மருத்துவமனைக்கு வந்து அஞ்சலி தேவியை விசாரித்து எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். எனது அண்ணன் பிரபுவும் அதில் சாட்சி கையொப்பம் செய்தாரா என்றால் ஞாபகம் இல்லை.

4. நான் சம்பவ இடம் சென்ற போது அஞ்சலிதேவி மட்டும் இருந்தார் என்றால் இல்லை நிறைய பேர் இருந்தார்கள். கூட்டமாக இருந்த இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் எதிரிகள் மூன்று பேரும் இருந்தார்கள் மற்றும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் இருந்தார்கள் அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியவில்லை. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும், அங்கு வைத்து எதிரிகளை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இரும்பு கம்பியை எதிரிகள் அங்கு போட்டு சென்றதாக நான் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அவர்கள் அங்கு வரவே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5. கடந்த 26.09.2018 தேதி மாலை சுமார் 04:30 மணியளவில் கே.கே நகரை சேர்ந்த கலைமணி என்பவர் பாலாஜி என்பவருக்கு சொந்தமான குடோனில் இருக்கும் கலைமணியின் இயந்திரத்தை சுத்தம் செய்வதற்காக எதிரிகளை அழைத்ததின் பேரில் எதிரிகள் அங்கு சென்று சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அஞ்சலிதேவி, பிரபு, சேகர் மற்றும் அவர்களுடன் நானும் சேர்ந்து எதிரி வரதராஜனிடம் குடோனை யார் திறந்தார்கள் என்று கேட்டதாகவும், யார் திறந்தார்கள் என்று தெரியவில்லை உரிமையாளர் கலைமணியை கேட்டால் தான் தெரியும் என்று வரதராஜன் சொன்னதாகவும், கலைமணியை கூப்பிடுவதற்கு திரும்பும்போது எதிரிகளை நாங்கள் அடித்ததாகவும், ஒன்றாம் எதிரி வரதராஜனின் வலது கையில் நாங்கள் அடித்ததாகவும், அதில் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், அவரின் நெஞ்சில் எட்டி உதைத்ததாகவும், அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும், அதனால் பவானி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேரலாம் என்று சென்றபோது அங்கிருந்த நாங்கள் அவரை தடுத்ததாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதனால் வரதராஜன் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததால் மேற்படி வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக முன்னெச்சரிக்கையாக நாங்கள் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. மேற்படி குடோனின் சாவி யாரிடமிருந்து என்றால் பாலாஜியிடம் இருந்தது. பாலாஜி சாவி கொடுக்காமல் அந்த குடோனை திறக்க முடியாது என்றால் சரிதான். வாடகை கட்ட முடியாமல் சாவியை பாலாஜியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை எனக்கு கடன் பிரச்சனை இருந்தது. எதிரி அன்பழகனிடம் கடன் வாங்கி இருந்தேன். அவர் மெஷினை கேட்டார் நான் அதனை விற்று அனைத்து கடன்காரர்களிடமும் கொடுப்பதற்காக குடோன் சாவியை பொதுவான நபரான உரிமையாளர் பாலாஜியிடம் கொடுத்து இருந்தேன்.

7. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என்னால் வாடகை கொடுக்க முடியாததால் தான் சாவியை பாலாஜியிடம் கொடுத்து இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணிக்கு வேறு வகையில் வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. எதிரி அன்பழகனுக்கு கடனை திருப்பி கொடுக்கக் கூடாது என்பதற்காக இந்த வழக்கில் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எவ்வளவு நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் அதனால் தான் எனக்கு ஞாபகம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சியம் அடித்துள்ளபடி தான் போலீசார் என்னை விசாரித்த போதும் சொன்னேனா என்றால் ஆமாம்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.11.04 17:27:22 -0800

Judicial Magistrate No.III,

Erode.